# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பழந்தமிழிசை பற்றிய செய்திகளுக்கு அழிக்கமுடியாத சான்றுகளாக விளங்குபவற்றுள் ஒன்று

அ) பாடல்கள் ஆ) கல்வெட்டுகள்

இ) முத்திரைகள் ஈ) கட்டிடங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மருதுபாண்டியனுக்கு தேசிய தீரச் செயலுக்கான பட்டயம் அளிக்கப்பட்ட ஆண்டு

அ) 2006 ஆ) 2005 இ) 2007 ஈ) 2008

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தான் அநுராதபுரம் சென்றடைந்தபோது அங்கு தமிழர் செறிந்து வாழ்ந்தனர் எனக் கூறிய ஆங்கிலேயர்

அ) றொபேட் நொக்சு ஆ) தோமசுவான்றி

இ) யே. பி. லூயிசு ஈ) வொன்றிபேர்க்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. நரம்புக் கருவிகளில் ஒன்று

அ) தண்ணுமை ஆ) ஏழில் இ) யாழ் ஈ) புல்லாங்குழல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. கிளி பழத்தைக் கொத்தித் தின்றது. இதில் பழத்தை என்பது

அ) அடைமொழி ஆ) செயப்படுபொருள்

இ) எழுவாய் ஈ) பயனிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. காய் என்பது

அ) சினைப்பெயர் ஆ) குணப்பெயர்

இ) காலப்பெயர் ஈ) இடப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. தமிழுக்காகப் புலவருக்குப் பணிவிடை செய்த வேந்தன்

அ) அதியர்மான் ஆ) சேரமான் இ) பாரி ஈ) காரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தீயன செய்தோர் துன்புறுவர் என்ற கருத்தை வெளிப்படுத்தும் பழமொழி.

அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

ஆ) இரக்கப்போனாலும் சிறக்கப்போ.

இ) முதலையும் முருடனும் கொண்டது விடா.

ஈ) அடாது செய்தவர் படாது படுவர்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பிணை என்ற சொல் குறிப்பது

அ) ஆண்மானை ஆ) பெண்மானை

இ) ஆண்யானையை ஈ) பெண்யானையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கதிரவனின் அன்புக்குரிய பூ எனப் புலவர் கூறுவது

அ) தாமரை ஆ) மல்லிகை இ) செவ்வந்தி ஈ) கொன்றை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஆறுவது சினம் எனக் கூறும் நூல்

அ) மூதுரை　　ஆ) கொன்றைவேந்தன்

இ) நல்வழி　　ஈ) ஆத்திசூடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. சென்ற இடமெல்லாம் சிறப்புக்குரியவர்

அ) மன்னன்　ஆ) கற்றோன்　இ) வீரன்　ஈ) உழவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. திருக்குறளில் சினங்காத்தல் பற்றிக் கூறும் அதிகாரம்

அ) விருந்தோம்பல்　　ஆ) வெகுளாமை

இ) நட்பறிதல்　　ஈ) நட்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. அல்லல் என்ற சொல்லின் பொருள்

அ) இன்பம்　ஆ) உவகை　இ) துன்பம்　ஈ) பெருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பெங்கூற்றர் என்னும் கோட்டை அமைந்துள்ள இடம்

அ) மட்டக்களப்பு　　ஆ) வெற்றிலைக்கேணி

இ) ஆனையிறவு　　ஈ) மன்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. அன்னப்புள்ளின் கற்சிலை காணப்படுவது

அ) தஞ்சைப் பெருங்கோவிலில்

ஆ) நெல்லையப்பர் கோவிலில்

இ) மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில்

ஈ) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. நடந்த என்பது

அ) வினையடி ஆ) பெயரெச்சம்

இ) வினையெச்சம் ஈ) வினைமுற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தமிழில் நீர் நிலைகளைக் குறிக்கும் சொற்களில் ஒன்று

அ) வாய்க்கால் ஆ) வயல் இ) வரம்பு ஈ) தோட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஓடின என்பதன் வினையடி

அ) ஓடி ஆ) ஓடு இ) ஓடிய ஈ) ஓடும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. வன்னிப்பகுதி ______________ பற்றுகளாகப் பிரிக்கப்பட்டது.

அ) ஐந்து ஆ) எட்டு இ) ஏழு ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. கூவியது என்பது

அ) ஆண்பால் ஆ) ஒன்றன்பால்

இ) பலர்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ______________ ஆட்சிக்காலத்தை வன்னியின் பொற்காலமாகக் கொள்ளலாம்.

அ) கயிலைவன்னியன் ஆ) எல்லாளன்

இ) இராவணன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. மறை என்ற வினையடியின் வினையெச்சம்

அ) மறைந்து ஆ) மறைந்த இ) மறைந்தது ஈ) மறையும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. உழவர் நிலத்தை உழும்போது மண்ணில் புதையுண்டு கிடந்தவை

அ) கற்கள் ஆ) சங்குகள் இ) தேங்காய்கள் ஈ) சிப்பிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மெய் எழுத்துகள்

அ) 12 ஆ) 18 இ) 216 ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மூங்கிலில் இருந்து செய்யப்படும் இசைக்கருவி

அ) மேளம் ஆ) புல்லாங்குழல் இ) வீணை ஈ) யாழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தமிழகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய தமிழ் மன்னன்

அ) பண்டாரவன்னியன் ஆ) கயிலைவன்னியன்

இ) வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஒழுக்கம் இல்லாதவனிடம் இது இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்.

அ) ஆக்கம் ஆ) செல்வம் இ) புகழ் ஈ) உயர்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தேம்பாவணி என்ற நூலை எழுதியவர்

அ) தனிநாயகம் அடிகள் ஆ) தாவீது அடிகள்

இ) இளங்கோ அடிகள் ஈ) பெச்சி அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. **மண், விண், நீர், தீ, வளி** என்பன

அ) ஐம்பூதங்கள் ஆ) ஐம்பொறிகள் இ) ஐம்பால் ஈ) ஐம்புலன்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இயற்கையில் பல வலுக்கள் (சக்திகள்) உள்ளன. அவை சூரியவலு, வளிவலு, மின்வலு, அணுவலு எனப் பல வகைப்படும். இவ்வலுக்கள் எமக்குப் பலவகையிலும் பயன்படுகின்றன. இவை எம் கண்களுக்குத் தெரிவதில்லை. விசிறி, பொறி, அடுப்பு, வானொலி, தொலைக்காட்சி போன்ற மின்கருவிகளைப் பயன்படுத்துவதற்கு மின்வலு உதவுகின்றது. இவ் மின்வலு நீர், அனல், அணு, சூரியஒளி போன்றவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. மின்வலு உற்பத்தி செய்யப்படும் வகையைக்கொண்டு அது நீர் மின்வலு, அணுமின்வலு, அனல்மின்வலு எனப் பல வகையாக அழைக்கப்படுகிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் அணுமின்வலு கூடுதலாகவும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் நீர் மின்வலு கூடுதலாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றது. மின்வலுவை முதன்முதல் கண்டறிந்தவர் கால்வின் என்பவராவர்.

1. மின்வலு எவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது?

 ______________________________

 ______________________________

2. மின் கருவிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

 ______________________________

 ______________________________

3. எந்நாடுகளில் அணுமின்வலு கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றது?

 ______________________________

 ______________________________

4. மின்வலுவை முதன்முதலில் கண்டறிந்தவர் யார்?

 ______________________________

 ______________________________

5. இயற்கையில் காணப்படும் வலுக்கள் எவை?

 ______________________________

 ______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இசை நுணுக்கம்பற்றிக் கூறும் நூல் எது?

2. தன்னைத்தான் காக்க விரும்புபவன் எதைக் காத்துக்கொள்ள வேண்டும்?

3. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகர் எது?

4. அரசு ஆணையை அறிவேன் எனினும் முரசு கடடிலென அறியாது படுத்தேன். இக் கூற்று யாரால்? யாருக்கு கூறப்பட்டது?

5. பூநகரிப்பகுதி அகழ் வாய்வில் எந்தெந்த நாட்டுக் காசுகள் கண்டெடுக்கப்பட்டன?

6. கயிலைவன்னியனுடன் நட்புப்பூண்டிருந்த கண்டி மன்னன் யார்?

7. ***யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்***
***சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு***

இக் குறளின் பொருளைத் தருக.

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களை வைத்து கவிதையை முழுமை ஆக்குக.**

# தமிழ் மகளே

| கவலை | பாடி | உலகில் | மொழி | இன்பம் |
|---|---|---|---|---|

*அழகு மலரே! நீ அமுத மொழி கூறி*

*பழகு தமிழ் பேச வா! _______________ நன்றாய் வாழ வா!*

*செல்ல வாய் திறந்து நீ சிந்தும் ஒரு சிரிப்பு*

*மெல்ல எம் _______________ தனைப் போக்குமே!*

*எந்தப் பொருள் வந்தாலும் என்ன பொருள் தந்தாலும்*

*எமக்கு ஒன்றும் இல்லை! உனைத் தவிர உலகில்*

*இனிய _______________ கூறி எனைக் கட்டித் தழுவி - எம்*

*இன்னல் நீக்கவா! என்றும் _______________ சேர்க்க வா!*

*தமிழ்த் தாயவள் மகிழ தமிழ் மண்ணில் தவழ*

*தங்கமே நீ வந்தாய்! என் உயிராய்!*

*தாலாட்டுப் _______________ நான் தூங்கவைப்பேன்!*

*தமிழ் மகளாய் உன்னை நான் வாழவைப்பேன்!*

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1) பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

அ) தன்மை :- ______________________

ஆ) முன்னிலை :- ______________________

இ) படர்க்கை :- ______________________

2) **அலை** என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர் :- ______________________

வினை :- ______________________

3) பின்வரும் சொல்லிய வகைகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ) கூற்றுச்சொல்லியம்

______________________

ஆ) ஏவற் சொல்லியம்

______________________

4) பின்வரும் மரபுச் சொற்றொடர்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று எடுத்துக் காட்டுகள் தருக.

அ) இரட்டைக்கிளவி

______________________

ஆ) அடுக்குத்தொடர்

______________________

5) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஒவ்வொன்றுக்கும் அடைமொழி இடம் பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

மாறனும் சேயோனும் பள்ளி நண்பர்கள். இருவரும் மாறனுடைய தோட்டத்திற்குச் சென்றனர். அங்கே பல செடிகள் அழகாக நின்றன. அச்செடிகளில் சிவப்பு, வெள்ளை, ஊதா போன்ற பல நிறங்களில் பூக்கள் பூத்திருந்தன.தோட்டத்தின் அருகே இரண்டு வெள்ளை முயல்கள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. இவற்றைப்பார்த்து இருவரும் மகிழ்ந்தனர்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ ஆறுவது சினம்
- ✸ பனிகாலமும் இக்காலத்தில் விளையாடப்படும் விளையாட்டுகளும்
- ✸ நீர் சென்ற சுற்றுலா

புள்ளிகள் 20